**யக்கலமுள்ள பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 10 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 05 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு யக்கலமுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

-------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான வெலெந்தாவ காணியில் செயற்பாட்டு விளைவுகளை காட்டுவதற்காக தனிப்பட்ட கணக்கு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்கு உரித்தாக்கப்பட்ட 02 காணிகளின் பெறுமதி ரூபா 150,000 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 256,486 பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்ற உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 348,993 தொகை எனவும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,348,993 தொகை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால்

கடன்கொடுத்தோர் மற்றும் செலவுகள் ரூபா 1,000,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பு தொகையாக உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 15,306,102 இற்கான தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் இடையே பகிரப்படாமல், ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(உ) பல வருட காலமாக செலுத்த வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 254,542 இற்கான முத்திரை வரியினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பாமல் சபையின் பொது நிதியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் மற்றும் உபகரண இருப்பு ரூபா 102,370 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 81,220 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் செலவு ரூபா 21,150 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) முன்னைய ஆண்டிற்கான 13 நிர்மாண வேலைகளுக்காக ஏற்பாடுகள் கிடைக்கப்பட்டு கொடுப்பனவுகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய உள்ளூராட்சி உதவியின் கீழ் ரூபா 139,097 தொகை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மற்றும் வருமானம் அதே தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 10 நிர்மாண வேலைகள் தொடர்பாக பல வருட காலமாக கிடைக்க வேண்டியவைகள் என மாகாண சபை உதவியின் கீழ் ரூபா 1,273,647 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட அப் 10 நிர்மாண வேலைகளின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கடன்பட்டோர் மற்றும் வருமானங்கள் அத் தொகைகளினால் மிகையாகக் காணப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டிய ரூபா 175,992 பெறுமதியான 06 நிர்மாண வேலைகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவு ரூபா 175,992 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது ''வீட்டுக்கு வீடு – கிராமத்துக்கு கிராமம்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 700,000 பெறுமதியான 03 நிர்மாண வேலைகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவு ரூபா 700,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது மகநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுமதி ரூபா 1,526,027 இற்கான 03 நிர்மாண வேலைகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவுகள் ரூபா 1,526,027 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) பண்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் -- 2013 இன் கீழ் ரூபா 10,791,610 இற்கான 03 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள் என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் கடன்பட்டோர் மூலதன வருமானமும் மற்றும் கடன்பட்டோரும் மூலதன செலவுகளும் அதே தொகைகளால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

(க) மீளாய்வாண்டின் போது 15 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய உதவி நிதி ரூபா 4,696,988 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 5,221,585 தொகை

என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 524,597 இனால் கடன்கொடுத்தோரும் மூலதனச் செலவும் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 1,953,667 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 110,314,750 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், நாளது வரை பேணப்பட்ட கடன் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு, வைப்புச் சான்றிதழ்கள், கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் கடிதங்கள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக 06 வருடங்களை மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,220,997 இற்கான மீதியொன்றினை இனங்கண்டு தீர்ப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 7,831,630 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 677,925 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வீத வரி

---------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி முறைமை வசதிகள், மின்சார வசதிகள், தொலைபேசி வசதிகள், நீர் வசதிகள், பிரதேச சபையினால் குப்பை கூளங்களை அகற்றுதல் ஆகிய மேற்கொள்ளப்படும் வசதிகள் காணப்படும் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என கணிக்கக் கூடிய யக்கலமுள்ள நகரம் போன்ற பகுதிகளை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர் வரி

----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 215,792 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 207,610 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

----------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 37,500 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 323,210 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,400,790 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.6 கடை வாடகை

-------------------------

சபைக்குச் சொந்தமான யக்கலமுள்ள வர்த்தக தொடர் கட்டிடத்தில் 39 கடைகள் தொடர்பாக 2015 ஏப்ரல் 09 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உடன்படிக்கையின் நிபந்தனை 08 இன் பிரகாரம் வாடகைக்கு பெற்ற ஆதனத்தை இடை வாடகைக்கு கொடுக்க முடியாது என குறிப்பிட்டிருந்த போதிலும் 04 கடைகள் இடை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தன.

(ii) வர்த்தக தொடர் கட்டிடத்தில் 05 கடைகள் நீளமாக்கப்பட்டு கண்ணாடிகளை பயன்படுத்த வேறாக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் அங்கீகாரம் பெற்றதற்கான சான்றுகள் வெளிப்படுத்தப்படவில்லை.

(iii) வர்த்தக தொடர் கட்டிடத்தில் 08 கடைகள் மூடப்பட்டிருந்தன. அத்துடன் 03 கடைகள் இருப்புக்களை சேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

1988 இன் 74 இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட் 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வெளிப்படுத்தும் சட்டத்தின் தேவைக்கு ஏற்ப சபையின் அனைத்து அங்கத்தவர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடும் கூற்று வழங்க வேண்டும். எனினும் 8 அங்கத்தவர்களினால் 2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------------

(அ) டிரக்டர் மற்றும் பொறித் தொகுதிகள்

-----------------------------------------------------------------

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கியிருந்த வாகனங்கள் தொடர்பாக 2014 ஏப்ரல் 17 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகனத் தேவைப் பட்டியலுக்கு வெளியே கிடைத்திருந்த 02 கியூப் இயலளவு கொண்ட டிபர் வண்டி கணக்காய்வுத் திகதி வரை எதுவித வேலைக்கும் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

(ii) சபையினால் 5 தொன் பாதை தகர்க்கும் இயந்திரம் ஒன்று விண்ணப்பித்திருந்த போதிலும் 08 தொன் பாதை தகர்க்கும் இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதனை அதிகாரப் பிரதேசத்தில் பாதைகளில் ஓட்ட முடியாமையினால் அபிவிருத்தி வேலைகளுக்காக ஈடுபடுத்த முடியாதுள்ளது.

(iii) சபைக்கு வழங்கியிருந்த டிபர் வண்டி, பாதை தகர்க்கும் இயந்திரம் நீர் பவுசர் மற்றும் டிரக்டர் ஆகிய வாகனங்களில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் மற்றும் உரிமையை சாட்டுதல் செய்யப்பட்ட கடிதங்கள் ஏதேனும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

பாதீட்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்